அலையோசை காதில் விழ கடல் ஓரம் நெஞ்சில் எழ
கரும்புலிகள் வீரத்தின் பாடலய்யா
உயிர்வீசி வாழும் வீரம் உள்ளங்கள் பேசும் நேரம்
உடல் எங்கும் புரியாத ஊடலய்யா
மெழுகாக உருகின்ற இதயமய்யா இவர்
மென்மைக்குள் உரிமையின் உதையமய்யா
கனவாகிப்பொகாத மனிதமையா இவர்
காலத்தால் உயிர் வாழும் புனிதமையா

அலையோசை காதில் விழ கடல் ஓரம் நெஞ்சில் எழ
கரும்புலிகள் வீரத்தின் பாடலய்யா
உயிர்வீசி வாழும் வீரம் உள்ளங்கள் பேசும் நேரம்
உடல் எங்கும் புரியாத ஊடலய்யா

படகேறி புன்னகைத்தார் எதை எண்ணி கையசைத்தார்
எங்கள் மண்ணில் இவர்கள்தானே உண்மை அழகடா
பகைமோதி வெல்லும்போதும் மனசுக்குள் என்ன ஏது
கண்ணை மூட நெஞ்சுக்குள்ளே நினைவு அலையடா
நீல வானம் போல உறுதி நிண்ணிருக்கும் பாரு
நீருக்குள்ளும் உங்கள் வீரம் நிழ வரலாறு
வெடி நிரப்பி எங்களுக்காய் பறந்தவரே
நொடிப்பொழுதில் பகை வென்று சிறந்தவரே 2
தேசம் மீது வீசும் காற்றில்  உங்கள் உயிர்ஜீவிக்கும்

அலையோசை காதில் விழ கடல் ஓரம் நெஞ்சில் எழ
கரும்புலிகள் வீரத்தின் பாடலய்யா
உயிர்வீசி வாழும் வீரம் உள்ளங்கள் பேசும் நேரம்
உடல் எங்கும் புரியாத ஊடலய்யா

அலை மேடை அரனாக்கி விடியாகி பகை தாக்கி
வெல்லும் படை கரும் புலிகள் மர்மம் தானடா
தாயகத்தின் உயிராகி தலைவனுக்கு உறவாகி
எண்ணம் எல்லாம் நிறைந்த இவர் தர்மம் தானடா
தன்னலமே இல்லாத கண்ணியத்தின் சீலர்கள்
தாயகத்து வாழ்வுக்கு  கடமையென்னும் தோழர்கள்
கொடி உயர வெடியாகி உழைத்தவரே
கொள்கையுடன் எமை காத்து உயர்ந்தவரே 2
புவி உள்ள காலம்வரை உங்கள் ஈகம் ப+ப்புக்கும்

அலையோசை காதில் விழ கடல் ஓரம் நெஞ்சில் எழ
கரும்புலிகள் வீரத்தின் பாடலய்யா
உயிர்வீசி வாழும் வீரம் உள்ளங்கள் பேசும் நேரம்
உடல் எங்கும் புரியாத ஊடலய்யா